ஜூன் 2, 2023

# பீல் பிராந்தியத்தைக் கலைப்பதற்காக ஜூன் 8 ஆம் தேதியன்று பிராம்ப்டன் நகர நிர்வாகம் தொலைபேசி வழி பொதுமக்கள் கருத்துக் கேட்கும் உரையாடலை நிகழ்த்தவிருக்கிறது

பிராம்ப்டன், ON –பீல் பிராந்தியத்தை 2025 ஆம் ஆண்டில் கலைப்பதற்கான ஒன்ட்டாரியோ மாகாண அரசின் முடிவு பற்றிக் கலந்துரையாடுவதற்காக, தொலைபேசி வழி பொதுமக்கள் கருத்துக் கேட்கும் உரையாடலை நிகழ்த்துவதற்காகவும் ப்ராம்ப்ட்டனைப் பொருத்தவரை நியாயமான கலைப்பு என்றால் என்ன என்பது பற்றியும் எடுத்தியம்புவதற்காக பிராம்ப்டன் நகர நிர்வாகம் தனது குடியிருப்புவாசிகள் மற்றும் வணிகர்களை அழைக்கிறது.

இந்தக் கலைப்பு செய்முறை பற்றிய பிராம்ப்டன் நகரவாசிகளின் உள்ளீடுகளைப் பெற, நகர சபையினரும் நகர அலுவலர்களும் விரும்புகின்றனர்; இதனையடுத்து எதிர்காலத்தில் இது பற்றி வாதிடுவதற்காக பிராம்ப்டன் நகர நிர்வாகம் எடுத்திருக்கும் நிலையை மாகாணத்திற்கு எடுத்துரைக்கவும் அதனைத் தொடர்ந்து மாறுதலுக்கான வாரியத்திடம் விரைவில் சமர்ப்பிக்கவும் இயலும்.

மே 18, 2023 தேதியன்று, ஒன்ட்டாரியோ மாகாணம்  மசோதா எண் 112 - The Hazel McCallion Act (Peel Dissolution), 2023 ஐ தாக்கல் செய்தது; இது பிராம்ப்டன், கலீடான் மற்றும் மிஸ்ஸிஸ்ஸாகா ஆகியவற்றை ஒரு ஒற்றை அடுக்கு நகராட்சியாக உருவாக்கி ஜனவரி 1, 2025 அன்று பீல் பிராந்தியத்தை கலைத்துவிடுவதற்கேயாகும்.

1974 ஆம் ஆண்டு முதலே பீல் பிராந்தியம் மூலமாக மிஸ்ஸிஸ்ஸாகாவின் வளர்ச்சிக்கு பிராம்ப்டன் குடியிருப்புவாசிகள் எவ்வாறு ஆதரவளித்தார்கள் என நகர நிர்வாகம் எடுத்துரைக்கும், மற்றும் இந்தக் கலைப்பு செய்முறையின் மூலமாக ஆகும்  செலவுகளை நகர நிர்வாகம் எப்படி ஈடுகட்டும் எனக் கோடிட்டுக் காட்டும்.

தொலைபேசி வழி மக்கள் கருத்துக் கேட்பு உரையாடலில் பங்கேற்பவர்களை மேயர் பேட்ரிக் ப்ரவுன் அவர்களுடன் கீழ்காணும் அலுவலர்களும் உபசரிப்பார்கள்:

- மிச்சேல் பல்லேஸ்சி, தலைவர், திட்டமிடல் & முன்னேற்றாம்; பிராந்திய  கவுன்சிலர், வார்டுகள் 2 & 6

- மார்லன் கால்லிடீன், தலைமை நிர்வாக அதிகாரி, பிராம்ப்டன் நகரம்
- ஸ்டீவ் கணேஷ், கமிஷனர், கட்டுமானம் & வளர்ச்சி மேலாண்மையைத் திட்டமிடல், பிராம்ப்டன் நகரம்
- நாஷ் டேமர், பொருளாளர், பிராம்ப்டன் நகரம்

**இந்த தேதியை ஒதுக்கிவைக்கவும் – பீல் பிராந்தியத்தை கலைப்பது பற்றி ப்ராம்ப்ட்டன் நகரம் நடத்துகின்ற தொலைபேசி வழி மக்கள் கருத்துக் கேட்பு உரையாடல்**
வியாழக்கிழமை, ஜூன் 8
மாலை 8-9:30

<u>தொலைபேசி வழியாகப் பங்கேற்க</u>

பங்கேற்பினை உறுதிப்படுத்த உங்கள் தொலைபேசி எண்ணைப் பதிவு செய்யவும்; ஜூன் 8 ஆம் நாள் மாலையில் Let's Connect Brampton லிருந்து உங்களுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வரும்

<u>ஆன்லைனிலும் சேர</u>
அந்த நாள் இரவில் குடியிருப்புவாசிகள் இதனை ஆன்லைனில் கேட்கலாம் .

-30-

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக் கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca